

# பாடம் 9

பெப்ரவரி 22-28

# தீட்டிலிருந்து சுத்திகரிப்புக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 8; தானி 2:38; ஆதி 11:4; லேவி 16; எபி 9:23-28.*

**மனன வசனம்:** அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். தானி 8:14.

தானி 8இன் தரிசனமானது கி.பி. 548 அல்லது கி.பி. 547இல் தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்பட்டது; தானி 7இன் தீர்க்கதரிசனத்தைத் தெளிவுபடுத்துகிற முக்கியக்கூறுகள் இதில் உண்டு. தானி 2, 7ஆம் அதிகாரங்களின் தீர்க்கதரிசனத்தைப் போல அல்லாமல், தானி 8இன் தீர்க்கதரிசனத்தில் பாபிலோன் வரவில்லை; ஏனென்றால் அந்தச் சமயத்தில் பாபிலோன் வீழ்ந்துகொண்டிருந்தது; பெர்சியர்கள் பாபிலோனுடைய இடத்தைப் பிடித்து, அடுத்த உலக வல்லமையாக எழும்பயிருந்தார்கள். தானி 8இன் தீர்க்கதரிசனம் தானி 7ன் தீர்க்கதரிசனத்திற்கு ஒத்திருக்கிறது. தானி 8இல் வேறு அடையாளங்கும் வார்த்தைகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஏனென்றால், பரலோக பாவ நிவாரண நாளுடன் தொடர்புடைய பரலோக ஆசரிப்பு சுத்திகரிப்புபற்றி அங்கு அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. பரலோக ஆசரிப்புக்கூடாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பேசுவதில் தானி 8இன் பங்களிப்பு தனித்துவமானது. பரலோக நியாய சங்கம் கூடுவதையும், மனுஷகுமாரன் ராஜரீகத்தைப் பெறுவதையும் தானி 7 காட்டுகிறது; பரலோக ஆசரிப்புக்கூடாரச் சுத்திகரிப்பை தானி 8 காட்டுகிறது. இந்த இரண்டு அதிகாரங்களுக்கும் ஒற்றுமை இருப்பதால், தானி 8ல் சொல்லப்படும் பரலோக ஆசரிப்புக்கூடார சுத்திகரிப்புக்கும், தானி 7ல் சொல்லப்படும் நியாயத்தீர்ப்பு காட்சிக்கும் சம்பந்தமிருப்பது தெரிகிறது.

*2020, பெப்ரவரி 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக்கடாவும்

**கேள்வி: தானி 8ன் தரிசனம் எதைப் பற்றியது? தானி 2, தானி 7இன் தீர்க்கதரிசனங்களுடன் இது எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது?**

தானி 2 , தானி 7இன் தரிசனங்களைப் போல தானி 8ன் தரிசனமும் ராஜ்யங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றியதே; ஆனால் பயன்படுத்தப்படும் அடையாளங்கள் வேறு. இந்த அடையாளங்கள் தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்துடன் தொடர்புடையவை. பண்டைய இஸ்ரவேலருக்கு நியாயத்தீர்ப்பு நாளாக இருந்த பாவநிவாரண நாளின் சடங்குடன் தொடர்புடையவை ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக்கடாவும்; அதனால்தான் அவை இங்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆசரிப்புக்கூடார ஆராதனையில் அவற்றைப் பலியிட்டார்கள். ஆனால் பாவ நிவாரண நாளில்தான் ஆட்டுக்கடாவும், வெள்ளாட்டுக்கடாவும் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. எனவே பாவ நிவாரண நாளை முக்கியப்படுத்தவே இந்த இரு மிருகங்களும் சொல்லப்படுகின்றன; அந்தத் தரிசனம் வலியுறுத்துவதும் பாவநிவாரணநாளைத்தான்.

ஓர் ஆட்டுக்கடா மேற்கும் தெற்கும் வடக்கும் பாய்வதாக தரிசனத்தில் தானியேல் பார்க்கிறார். தானி 8:4. இந்த வல்லமையின் வளர்ச்சியைச் சுட்டிக்காட்ட மூன்று திசையிலும் அது சென்றதாகச் சொல்லப்படுகிறது. 'ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக்கூடாதிருந்தது; அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை; அது தன் இஷ்டப்படியே செய்து வல்லமைகொண்டது.' தானி 8:4. இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதிய-சாம்ராஜ்யத்தைக் குறிப்பதாக தூதன் விளக்குகிறான்; இந்த வல்லமை பெற்ற மூன்று பெரும் வெற்றிகளை மூன்று திசைகளும் சுட்டிக்காட்டக்கூடும்.

அடுத்து, பெரிய கொம்புடன் ஒரு வெள்ளாட்டுக்கடா தோன்றுகிறது. அது, மகா அலெக்ஸாண்டருடைய தலைமையின் கீழ் இருந்த கிரேக்க சாம்ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டுகிறது. தானி 8:21. அந்த வெள்ளாட்டுக்கடா 'நிலத்திலே கால்பாவாமல்' சென்றது. தானி 8:5. அவ்வளவு வேகமாகச் சென்றது. மகா அலெக்ஸாண்டர் படுவேகமாகப் பெற்றுவந்த வெற்றிகளை அது குறிக்கிறது. தானி 7இல் செட்டைகளுள்ள சிவிங்கி அதைச் சுட்டிக்காட்டுகிறது. அந்த வெள்ளாட்டுக்கடா 'பலங்கொண்டிருக்கையில், அந்தப் பெரிய கொம்பு முறிந்துபோயிற்று.' தானி 8:8. அதற்குப் பதிலாக நான்கு கொம்புகள் முளைத்து, ஆகாயத்தின் நான்கு திசைகளுக்கும் எதிராய்ச் செல்கின்றன. கி.மு. 323இல் அலெக்ஸாண்டர் பாபிலோனில் மரித்து, அவனுடைய ராஜ்யத்தை அவனுடைய நான்கு தளபதிகள் பிரித்தபோது, இது நிறைவேறியது.

தானி 2:38 முதல் தானி 8:20,21 வரை நான்கு ராஜ்யங்களில் மூன்றின் பெயர்கள் தரிசனத்தில் சொல்லப்பட்டுள்ளன; இந்தத் தீர்க்கதரிசனங்களுக்கு நாம் சரியாக அர்த்தங்காண இந்த உண்மைகள் எவ்வாறு உதவுகின்றன?

# சின்னகொம்பின் எழுச்சி

**கேள்வி: தானி 8:8-12ல், சின்ன கொம்பு எந்தெந்த திசைகளில் சென்றது; இதைக் குறித்து நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது ஏன் முக்கியமானது?**

நான்கு திசைகளுக்கு எதிராக நான்கு கொம்புகள் எழும்பின; அவற்றில் ஒன்றிலிருந்து சின்னகொம்பு எழுந்ததாக வேதாகமம் சொல்கிறது. இந்தக் கொம்பு அல்லது வல்லமையானது அலெக்ஸாண்டரின் நான்கு தளபதிகளைச் சுட்டிக்காட்டுகிற நான்கு கொம்புகளில் ஒன்றிலிருந்து வந்ததா? அல்லது நான்கு திசைகளில் ஒன்றிலிருந்து வந்ததா? மூலபாஷையில் இந்த வசனத்தின் இலக்கண அமைப்பைப் பார்த்தால், ஆகாயத்து நான்கு திசைகளில் ஒன்றிலிருந்து இந்தக் கொம்பு வந்ததாகத் தெரிகிறது. கிரேக்க சாம்ராஜ்யத்திற்கு பிறகு, அதன் நான்கு திசைகளில் ஒன்றிலிருந்து வருவதால், அஞ்ஞான ரோமையும் போப்புமார்க்க ரோமையும் இந்தக் கொம்பு சுட்டிக்காட்டுகிறது. 'ரோமின் இரு பகுதிகளான அஞ்ஞான ரோமையும் போப்பு ரோமையும் இந்தச் சின்ன கொம்பு சுட்டிக்காட்டுகிறது. அஞ்ஞான ரோம் யூதமக்களுக்கு எதிராகவும் ஆதிகாலக் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும், பிறகு போப்புமார்க்க ரோம் நம்முடைய காலம்வரை வந்து, கடைசிக்காலம்வரைக்கும் இருப்பதை தானியேல் கண்டார்.' - *4SDABC,* பக். 841.

இந்தச் சின்ன கொம்பு முதலில் பக்கவாட்டு திசைகளில் 'தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று.' தானி 8:9. அஞ்ஞான ரோமிடம் வீழ்ந்த மூன்று பெரும் பகுதிகளை இந்த திசைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சின்ன கொம்பு மேல்நோக்கி சென்றதுபற்றி விளக்கமாகச் சொல்கிறது. தானி 7இன் சின்ன கொம்பு போலவே இதன் செயல்பாடு உள்ளது.

1 இரண்டுமே முதலில் **சிறியதாக** இருக்கின்றன. தானி 7:8; 8:9.
2 இரண்டுமே பிறகு **பெரிதாகின்றன**. தானி 7:20; 8:9.
3 இரண்டுமே **உபத்திரவம்** தந்தவை. தானி 7:21,25; 8:10,24.
4 இரண்டுமே தங்களை உயர்த்தி, **தேவதூஷணம்** பேசுகின்றன. தானி 7:8,20,25; 8:10,11,25.
5 இரண்டுமே **தேவ மக்களைக்** குறிவைக்கின்றன.
6 இரண்டுமே **தீர்க்கதரிசனக் காலத்தால்** வரையறுக்கப்படுகிற செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. தானி 7:25; 8:13,14.
7 இரண்டுமே **முடிவுகாலம்மட்டும்** இருக்கின்றன. தானி 7:25,26; 8:17,19.
8 இரண்டுமே **இயற்கைக்கு அப்பாற்பட்ட அழிவைச்** சந்திக்கின்றன. தானி 7:11,26; 8:25.
9 தானி 7ம் அதிகாரம் போப்புமார்க்கத்தைச் சுட்டிக்காட்டுவதால், தானி 8இல் சொல்லப்படும் சின்ன கொம்புவின் மேல்நோக்கிய வளர்ச்சியும் அதே வல்லமையைத்தான் சுட்டிக்காட்டவேண்டும். அஞ்ஞான ரோமும் போப்புமார்க்க ரோமும்தான், இறுதியான முக்கிய ராஜ்யம் என்பதை தானி 2, தானி 7 அதிகாரங்கள் காட்டுகின்றன.

# பரிசுத்த ஸ்தலத்தின்மேல் தாக்குதல்

**கேள்வி: சின்ன கொம்பு என்ன செய்ததாக தானி 8:10-12 வசனங்கள் சொல்கின்றன?**

பாபேல் கோபுரத்தைக் கட்டினவர்கள் போல (ஆதி 11:4) இந்தச் சின்ன கொம்பு செயல்படுகிறது. தானி 8:10. ‘சேனை,’ ‘நட்சத்திரங்கள்’ ஆகிய வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் தேவ மக்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இஸ்ரவேல் கர்த்தருடைய சேனை என்று அழைக்கப்பட்டது. யாத் 12:41. தேவ பிள்ளை களை ஆகாய மண்டலத்தின் ஒளி என்று தானியேல் சுட்டிக்காட்டுகிறார். தானி 12:3. எனவே பரலோகத்திலுள்ள வர்களை அல்ல, பரலோகக் ‘குடிகளான’ தேவ மனிதர்களை அது தாக்குகிறது. பிலி 3:20. அஞ்ஞானப் பேரரசர்கள் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களைக் கொன்றிருக்கிறார்கள். ஆனால், சின்னகொம்பு மேல்நோக்கியும் செயல்படுகிறது. எனவே, போப்புமார்க்க ரோமின் செயல்பாடுகளையும் இந்தத் தீர்க்கதரிசனம் கூறுகிறது.

தானி 8:11ல் ‘அதிபதி’ என்று அழைக்கப்படுபவர், ‘பிரபுவாகிய மேசியா’ (தானி 9:25), ‘அதிபதியான மிகாவேல்’ (தானி 10:21), ‘பெரிய அதிபதி’ (தானி 12:1). இவை இயேசுவுக்கான பட்டங்கள். சேனையின் ‘அதிபதியும்,’ நம் பிரதான ஆசாரியனும் இயேசு கிறிஸ்துவே. எனவே போப்புமார்க்கமும் அதோடு சம்பந்தப்பட்ட மார்க்கமுறையும் இயேசுவின் பிரதான ஆசாரிய ஊழியத்தைக் குழப்பி, முறியடிக்க முயல்கிறது.

‘அன்றாட பலி’ (தானி 8:11) என்றதும், பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் இடைவிடாமல் நடைபெற்ற பல்வேறு சடங்காச்சார ஆராதனைகள் நினைவுக்கு வருகின்றன. பலிகளும் பரிந்துபேசுதலும் அதில் அடங்கும். இந்த ஆராதனைகள்மூலம் ஆசரிப்புக்கூடாரத்தில் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்பட்டன. இந்த ஆராதனைமுறை பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் இயேசு செய்யும் ஊழியத்தைச் சுட்டிக்காட்டியது. எனவே, கிறிஸ்துவின் பரிந்துபேசுதலுக்குப்பதிலாக போதகர்களின் பரிந்துபேசுதலை போப்பு மார்க்கம் புகுத்த இருந்ததை இந்தத் தீர்க்கதரிசனம் முன்னுரைக்கிறது. இப்படிப்பட்ட போலித்தொழுகையின் மூலம் கிறிஸ்துவின் பரிந்துபேசுதலின் ஊழியத்தை சின்னகொம்பு நீக்குகிறது; கிறிஸ்துவின் ஆசரிப்புக் கூடாரத்தைக் கீழே தள்ளினது.

‘அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியைசெய்து அநுகூலமடைந்தது.’ தானி 8:12. இயேசு தம்மை சத்தியமென்றார். யோவான் 14:6. வேத வசனமும் சத்தியமெனக் குறிப்பிட்டார். யோவான் 17:17. ஆனால் போப்புமார்க்கம் வேதாகமத்தை பிற மொழிகளில் மொழிபெயர்க்கவிடாமல் தடுத்து, வேதாகமத்திற்கு விளக்கம் சொல்கிற அதிகாரத்தை தானே வைத்துக்கொண்டது. வேதாகமத்தை கருத்தளவில் வைத்து, பாரம்பரியத்தைச் செயல்படுத்தியது. வேதாகமத்தைவிட பாரம்பரியத்தை விசுவாசத்தின் தரக்கோலாக நியமித்தது.

மனிதப்பாரம்பரியங்களைவிட வேதாகம சத்தியத்தின் அறிவு மிகவும் முக்கியமென்பதை இன்றைய ஆராய்ச்சி எவ்வாறு வலியுறுத்துகிறது?

**புதன்** பெப்ரவரி 26

# பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு

**கேள்வி: தானி 8:14ல் என்ன சொல்லப்படுகிறது?**

---

சின்ன கொம்பின் பயங்கரத் தாக்குதலுக்கு பிறகு, பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு அறிவிக்கப்படுகிறது. தானி 8:14ல் சொல்லப்படும் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்புக்கும், தானி 7:9-14ல் சொல்லப்படும் நியாயத் தீர்ப்பு காட்சிக்கும் சம்பந்தமிருப்பது புரிந்தால்தான் இந்தச் செய்தியைப் புரிந்துகொள்ளமுடியும். இந்த நியாயத்தீர்ப்பு பரலோகத்தில் நடப்பதால் ஆசரிப்புக்கூடாரமும் பரலோகத்தில்தான் இருக்கவேண்டும். தேவன் மனிதர்களுடைய விவகாரத்தில் தலையிடுவதை நியாயத்தீர்ப்பு கண்ணோட்டத்தில் தானியேல் 7 சொல்கிறது. அதே நிகழ்வை ஆசரிப்புக் கூடாரக் கண்ணோட்டத்தில் தானி 8 விவரிக்கிறது.

பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியாக பூலோக ஆசரிப்புக் கூடாரம் இருந்தது. இரட்சிப்புத் திட்டத்தின் விரிவான நோக்கங்களை எடுத்துக்காட்டுவதற்காக அது ஏற்படுத்தப்பட்டது. தினமும் மக்கள் தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடாரத்திற்குக் கொண்டு வந்தார்கள். அங்கே பாவங்களை அறிக்கையிட்டு பாவமன்னிப்பு பெற்றார்கள். அவர்களுடைய பாவங்கள் பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்பட்டதாகக் கருதப்பட்டது. எனவே பரிசுத்தஸ்தலத்திலிருந்து அந்தப் பாவங்களைச் சுத்திகரிப்பதற்கு ஒருநாள் அவசியமாக இருந்த்து. அது பாவநிவாரண நாள் என்று அழைக்கப்பட்டது. வருடத்திற்கு ஒருமுறை அந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது. லேவியராகமம் 16.

பரலோகப் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட வேண்டியது ஏன் அவசியம்? ஒப்பிட்டுப் பார்த்தால், மனந்திரும்பின இஸ்ரவேலருடைய பாவங்கள் பூலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கு மாற்றப்பட்டதுபோல, இயேசுவை ஏற்றுக்கொண்டு, அறிக்கையிடுவோரின் பாவம் பரலோக பரிசுத்த ஸ்தலத்திற்கு மாற்றப்படுவதை புரிந்துகொள்ளலாம். பூலோக பாவநிவாரண நாளில் ஏராளமான மிருகங்கள் பலியிடப்பட்டன, அவை இயேசு மரிக்கவிருந்ததைக் காட்டின. பாவநிவாரண நாளில் பாவிகள் பயமின்றி நிற்பதற்கு அதுதான் ஒரே வழியாக இருந்தது.

பூலோகப் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட பாவநிவாரண நாளில் நடைபெற்றதுபோலவே, பரலோகப் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதலும் நடந்தாக வேண்டுமல்லவா? பூமியின் பாவநிவாரண நாள் சுட்டிக்காட்டின பரலோக பாவநிவாரண நாளையே தானியேல் 8:14 சொல்கிறது. மேசியாவின் இரத்தம்மட்டுமே பாவிகளாகிய நம் பாவங்களை மன்னித்து, நியாயத்தீர்ப்பில் நிற்க நம்மைத் தகுதியாக்க முடியும் என்பதே அடிப்படைச் செய்தி.

---

இயேசு நமக்காகச் செய்த தியாகத்தால் அவருக்குள் நாம் பெற்றுள்ள இரட்சிப்பு பற்றி எபிரெயர் **9:23–28** வசனங்கள் சொல்வது என்ன?

# தீர்க்கதரிசன கால அட்டவணை

**கேள்வி: தானி 8:13ல் எழுப்பப்படும் கேள்வி என்ன? அதற்கு அடுத்த வசனத்திலுள்ள பதிலை விளங்கிக்கொள்ள அது எவ்வாறு உதவுகிறது?**

2300 இராப்பகலின் காலம் எது? முதலாவது, ஆடு மற்றும் வெள்ளாட்டுக்கடா பற்றியும், அதைத் தொடர்ந்து சின்ன கொம்பு உண்டாக்கும் சேதம்பற்றியும் தானியேலுக்குக் காட்டப்பட்ட பிறகு, தானி 8:13ல் அந்தக் கேள்வி வருகிறது. தீர்க்கதரிசன காலத்தின்போதும், அதன் முடிவிலும் என்ன நடக்கும் என்று அந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது. சின்ன கொம்பு செயல்படுகிற காலத்தை மட்டுமே அந்தக் காலக்கட்டம் சுட்டிக்காட்டுவதாகச் சொல்லமுடியாது. தரிசனம் என்கிற வார்த்தை வெள்ளாட்டுக்கடா முதல் சின்ன கொம்பு செயல்படுகிற காலம் வரைக்கும் சுட்டிக்காட்டுகிறது. எனவே, வரலாற்றில் ஒரு நீண்ட காலத்தை இது காட்டவேண்டும்.

ஆட்டுக்கடா [மேதிய-பெர்சியா], வெள்ளாட்டுக் கடா [கிரேக்கம்], சின்ன கொம்பும் அதன் செயல்பாடுகளும் [அஞ்ஞான மற்றும் போப்பு மார்க்க ரோம்] சம்பந்தப்பட்ட ‘தரிசனம் எதுவரைக்கும் இருக்கும்?’ என்கிற கேள்விக்கு, இன்னொரு தூதன், ‘‘இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்’’ என்று சொன்னான். தானி 8:14. இது ஒரு நீண்ட காலக்கட்டமெனப் பார்த்தோம். மேதிய-பெர்சிய சாம்ராஜ்ய காலத்தில் ஆரம்பித்து, கிரேக்க சாம்ராஜ்யத்தின் காலத்தைத் தொடர்ந்து, அஞ்ஞான - போப்புமார்க்க ரோமின் காலம் வரைக்கும் ஆயிரக்கணக்கான வருடங்களை உள்ளடக்கியது. வரலாற்று அணுகுமுறைப்படி (பாடம் 1), வருடம்-நாள் நியதியை வைத்து இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கணக்கிட்டால், 2300 இராப்பகல் என்பது 2300 வருடங்களைக் குறிக்கிறது. வெறுமனே 2300 நாட்கள் என்று மட்டும் பார்த்தால், ஏறக்குறைய ஆறு வருடங்கள்தாம் வரும். அந்தத் தரிசனத்தின் நிகழ்வுகள் அவ்வளவு குறுகிய காலத்திற்குள் நடந்திருக்க வாய்ப்பில்லை. எனவே வருடம்-நாள் நியதியின்படி அர்த்தங்காணவேண்டும்.

இந்தக் காலக்கட்டம் எப்போது ஆரம்பிக்கிறதென தானி 8ல் விபரம் ஏதும் சொல்லப்படவில்லை. ஆனால், தானி 9 அதுபற்றிய ஒரு முக்கிய தகவலைச் சொல்கிறது. (அடுத்த வாரப் பாடத்தைப் பார்க்கவும்.)

வேதாகமத்தில் நீண்ட காலத் தீர்க்கதரிசனம் இந்த 2300 இராப்பகல் தரிசனமாகும். நம் வாழ்நாளோடு ஒப்பிடும்போது 2300 வருடங்கள் என்பது மிக நீண்ட காலக்கட்டம்! தேவனோடான நம் அனுபவத்திலும், இறுதி கால சம்பவங்களுக்காகக் காத்திருப்பதிலும் நாம் பொறுமையோடு வாழவேண்டியது பற்றி என்ன அறிந்துகொள்ளலாம்?

## வெள்ளி

பெப்ரவரி 29

# மேலும் படிக்க:

**கேள்வி: தானி 2,7,8இல் நாம் பார்த்த ராஜ்யங்களின் வரிசைமுறையானது அட்டவணையாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்தஸ்தல சுத்திகரிப்புபற்றி அதிலிருந்து என்ன புரிகிறது?**

| தானி 2 | தானி 7 | தானி 8 |
|---|---|---|
| பாபிலோன் | பாபிலோன் | ____________ |
| மேதிய–பெர்சியா | மேதிய–பெர்சியா | மேதிய–பெர்சியா |
| கிரேக்கம் | கிரேக்கம் | கிரேக்கம் |
| அஞ்ஞான ரோம் | அஞ்ஞான ரோம் | அஞ்ஞான ரோம் |
| போப்புமார்க்க ரோம் | போப்புமார்க்க ரோம் | போப்புமார்க்க ரோம் |
| ____________ | பரலோக நியாய விசாரணை | பரிசுத்தஸ்தல சுத்திகரிப்பு |
| இரண்டாம் வருகை | இரண்டாம் வருகை | ____________ |

இந்த அதிகாரங்களுக்கு சம்பந்தமிருக்கின்றன. ஒரே தேசங்கள் பற்றி வருகின்றன. மேலும், போப்புமார்க்க ரோமின் 1260 வருட உபத்திரவக் காலத்திற்கு பிறகு வருகிற பரலோக நியாயவிசாரணை காட்சியை (தானி 7), பரிசுத்தஸ்தல சுத்திகரிப்புடன் சம்பந்தப்படுத்தி தானி 8 சொல்கிறது. தானி 7ல் சொல்லப்படுகிற, நியாய விசாரணைதான், அதாவது உலகத்தின் முடிவுக்கு ஏதுவான அந்த நியாயவிசாரணைதான் தானி 8ல் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு என்று சொல்லப்படுகிறது. ஒரே விஷயம் இரண்டு விதமாக இங்கு குறிப்பிடப்படுகிறது. சின்ன கொம்பு சுட்டிக்காட்டுகிற வல்லமையின் 1260 வருட உபத்திரவக்காலத்திற்கு பிறகு இந்த இரண்டுமே நிகழ்கின்றன.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *தானி 7ல் சொல்லப்படும் நியாயவிசாரணைதான் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு என்றும், சின்ன கொம்பு பற்றின 1,260 வருட தீர்க்கதரிசனக் காலத்திற்குபிறகு, ஆனால் தேவனுடைய ராஜ்யம் இறுதியாக நிறுவப்படுவதற்குமுன்பு அது ஸ்தாபிக்கப்படப் போகிறது என்றும் புரிந்துகொள்ள மேலுள்ள அட்டவணை எவ்வாறு உதவியாக இருக்கிறது?*

2 *தானி 8இன் தீர்க்கதரிசனமானது வன்முறையும் தீமையும் நிறைந்ததாக வரலாறைச் சுட்டிக்காட்டுகிறது. இரண்டு உலக பேரரசுகளைச் சுட்டிக்காட்டிய மிருகங்கள் ஒன்றோடு ஒன்று சண்டையிடுகின்றன. தானி 8:8-12. அவர்களுக்கு பிறகு எழும்புகிற சின்ன கொம்புவின் வல்லமை கொடூரமான, உபத்திரவப் படுத்துகிற வல்லமையாக இருக்கிறது. தானி 8:23-25. எனவே, இந்த உலகத்தில் காணப்படுகிற பாடுகளை மறைத்துப் பேசுவதற்கு வேதாகமம் முயலவே இல்லை. நம்மைச் சுற்றிலும் தீமை காணப்பட்டாலும்கூட, தேவனிலும் அவருடைய நற்குணத்திலும் நாம் நம்பிக்கையோடு இருப்பதற்கு என்ன செய்யலாம்?*